1661

மனச்சாட்சியை மறந்து அரசியல்லாபம்தேடும் அரசியல் வாதிகள்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 6 இதழ் 223
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 22-9-1991

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான மனு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு வரும்போது ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் இறுதி முடிவெடுக்கும் போது அவர்களின் மனச்சாட்சியைவிட

(4ம் பக்கம் பார்க்க)

மாஜி அமைச்சர்களுடன் மல்லிமாராய்ச்சி சந்திப்பு

(கொழும்பு)
லலித் கோஷ்டியில் அண்மையில் சேர்ந்த இரு ராஜாங்க அமைச்சர்களை உணவு கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமராய்ச்சி நேற்று சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்

(4-ம் பக்கம் பார்க்க)

மணலாறு பகுதிக்கு ஹமில்டன் விரைவு

(கொழும்பு)
மணலாறுப் பகுதியில் யுத்தம் இடம்பெறும் பகுதிக்கு இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க நேற்று அவசர

(4-ம் பக்கம் பார்க்க)

★ கிழக்கில் தாக்குதல் தொடர்கிறது

மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

12 படையினர் உயிரிழப்பு!

உயர் அதிகாரியும் பலி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை ரோந்துசென்ற படையினர்மீது புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் ஒரு உயர்அதிகாரி உட்பட 12 படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். 11 பேர் படுகாயமடைந்தனர்- ஆயுதங்கள் பலவும் புலிகளால் மீட்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில், மட்டக்களப்பில் உள்ள வாகனேரி என்ற இடத்தில் பிரதான வீதியூடாக இரு ஜீப் வண்டிகளில் ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலின் போதே உயர் அதிகாரி ஒருவர் உட்பட 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இராணுவத்தினரிடமிருந்து ஏ. கே. எல். எம் ஜி. துப்பாக்கி-1, அதற்குரிய ரவைக் கூடுகள்-5, தொடரவைகள்-450, கி. 56 2 ரகத் துப்பாக்கிகள்-6. அதற்குரிய ரவைக் கூடுகள்-14, கி. 81 ரகத் துப்பாக்கிகள் 3 அதற்குரிய ரவைக்கூடுகள்-2 ஜே.ஆர். கைக்குண்டுகள் 4. புகைக் குண்டு 1, நடுத்தர ரவைகள் 575போன்ற ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்.

முத்துபண்டாவும் லலித் அணியில்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பொலனறுவை மாவட்ட எம். பி. திரு. எச். ஏ. முத்துபண்டா லலித் கோஷ்டியில் சேர்ந்துகொண்டார்
லலித் கோஷ்டியின் கூட்டம் நேற்றுமுன்தினம் கண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

பிரேமாவுக்கு பலத்தஎதிர்ப்பு பிக்குகள்கூட்டம் தடைப்பட்டது

(கொழும்பு)
சிங்கள மக்களிடையே செல்வாக்கு மிக்க பௌத்த மத குருமார்களிடையேயும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்குவதுகுறித்து பலத்த கருத்துவேறுபாடுகள் தோன்றியுள்ளது.
மகாநாயக்கர்களினால் ஜனாதிபதிக்கு ஆதரவாககொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட பௌத்த மத குருமார்களின் கூட்டத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டு கூட்டமும் தடைப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஈழ இளைஞர் தப்பியோட்டம்

(சென்னை)
தமிழகத்தில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் தப்பியோடிவிட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.
எம்.உதயகுமார் (25 வயது) என்பவரே இவ்வாறு தப்பியோடிய இளைஞர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு அரசியல் நெருக்கடிக்கு விரைவில் சுமுகமான தீர்வு?

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றச்சாட்டு மனு ஐ. தே. கட்சிக்குள் கிளம்பியுள்ள அரசியல் நெருக்கடிக்கு அடுத்த சில தினங்களில் சுமுகமான தீர்வு ஒன்று காணப்பட்டுவிடும் என்று கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.
இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட சமரச முயற்சிகள் வெற்றியளிக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

5000 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கென 5,000 ஆசிரிய நியமனங்கள்வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

வீடு பார்க்கச்சென்றவர் படையினரால் கொலை

[மருதங்கேணி]
ஆழியவளையில் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் 5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டும், வெட்டியும் சுடப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆழியவளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நாகேஸ்வரன் (வயது 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலையுண்டவராவார்.
தமது வீட்டைப் பார்க்க மனைவி, மாமனுடன் சென்றபோது ரோந்தில் வந்த இராணுவம் கைதுசெய்து பின்னர் மனைவியையும், மாமனையும் போகும்படி விரட்டி அனுப்பிவிட்டு அவருக்கு இக்கொடூரச் செயலைப்புரிந்து கொலைசெய்துள்ளார்கள்.

[4-ம் பக்கம் பார்க்க]

2 இராணுவம் பலி 16 சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)
மணலாறு-முல்லைத்தீவு பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் 2 படையினர் கொல்லப்பட்டதுடன் 16படையினர் படுகாயமடைந்துள்ளதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
படையினரின் முன்னேற்றத்தை புலிகளின் கடும்தாக்குதல் அதிகளவில் தாமதப்படுத்துவதாகவும் இராணுவட்டாரங்கள் தெரிவித்தன. (பி)

புலிகள் ஆதரவு மாநாட்டுக்கு தடை

(சென்னை)
தமிழகத்திலுள்ள தர்மபுரி மாவட்டம் கருரில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடைபெறவிருந்த புரட்சிகர இளைஞர் அணிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த 20 பெண்கள் உட்பட 250 பேரை காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர்.
அந்த மாநாடு தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (மா)

க. பொ. த. முடிவுகள் இன்று வெளியாகும்

[யாழ்ப்பாணம்]
கல்விப் பொதுத் தராதர உயர்தர விசேட பரீட்சை (1990) பெறுபேறுகள் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களிலி

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

கணித வகுப்பு

O/L மாணவர்க்கான விசேட கணித வகுப்புக்கள் தினமும் காலை 6-00 மணிக்கு நடைபெறுகின்றன. இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும், மாவீரர் குடும்பங்களுக்கும் இலவசம். மூகவலி ஆசிரியர் எஸ். கே. ஜீவமோகன், தமிழ் வைத் தலைவர், தமிழ் மாமன்றம். செல்வச்செந்தில் வீதி, இருபாலை. கோப்பாய். (சி-5371)

ஆண்டு 4, 5.

ஆண்டு 4 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 22.09.91 ஞாயிறும், ஆண்டு 5 அநுமதிப் பரீட்சை 29.09.91 ஞாயிறும் வெளியிடப்படும் முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 5386)

தேவை

லக்ஸ்பிறே, ஹைலாண்ட் மற்றும் பால்மா வெற்று ஈயப் பைகள் நல்ல நிலமையில் சேர்ப்பித்து ஒன்றுக்கு 10/-சதம்வீதம்பெற்றுக்கொள்ளுங்கள். மிஸ்கிவைற், யாழ்ப்பாணம். (எ-1595)

வைத்திய நிலையம்

வேலணையிலும் புளியங்கூடல் சந்தியிலும் இயங்கிய நடன முருகன் வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் சந்திரச் சந்தி, கொட்டடி றோட்டில் இயங்கி வருகின்றது. தொடர்பு; டாக்டர் சந்தையா நவரத்தினம். (சி-5391)

ஜோதிடம்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி யாபரவின் முற்பிறவி சீரடி சாயிபாபா வரலாறு ரூ 10/-. செவ்வாய், வியாழ மாற்றம் ரூ 6/50. எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன். (சி 5394)

சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் பிரான்பற்று வாசியான பாலகிருஷ்ணன் எனபவருக்கு சொந்தமான சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளது. இத் திருட்டு சம்பவம் குறித்து விடுதலைப்புலிகளின் பண்டத்தரிப்பு பிரதேச அலுவலகத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (72)

175வது ஆண்டு நிறைவு விழா

(பண்டத்தரிப்பு)

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் அத்தியட்சாதீனத்தின் 175வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பண்டத்தரிப்புச் திருச்சபையின் ஆதரவில் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. (72)

யாருடையது?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராதா ராஜலஷ்மி என்பவருக்குச் சொந்தமான பாஸ்போர்ட் கேரதீவு வீதியில் கைதடி மேற்கு கதிரவேலு என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் காரியாலய நேரத்தில் தகுந்த ஆதாரங்கள் காட்டி இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாண அத்தியட்சாதீன
தென் இந்திய திருச்சபை

அமெரிக்க இலங்கை மிஷன்

175ஆவது ஆண்டு விழா

(1816 - 1991)

செப்ரெம்பர் - 23

அன்புடையீர்,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற இருக்கின்ற அமெரிக்க இலங்கை மிஷனின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களுக்கு நீங்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

நிகழ்ச்சி நிரல்

8-30 நன்றி செலுத்தும் திருவிருந்து ஆராதனை
ஆசன ஆலயம், வட்டுக்கோட்டை

11-00 மிஷன் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும்
ஒட்லி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

2-30 பொதுக்கூட்டம்
ஆசன ஆலயம் வட்டுக்கோட்டை

அருள்திரு. அ. ஜெயக்குமாரன்
செயலாளர்
அமெரிக்க இலங்கை மிஷன்,
யாழ். அத்தியட்சாதீன தென் இந்திய திருச்சபை

(சி-5364)

32-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
நாகேஸ்வரி சுந்தரலிங்கம்

மண்ணுக்கு: 10-07:1944 — விண்ணுக்கு: 22-08.1991

திதி: திரயோதசி

மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பதற்காகத் தன்னையே
அழித்துக் கொள்ளும் மெழுகுவர்த்தி போல்
எங்களுக்கு ஒளி தர வேண்டுமென்பதற்காக
உன்னையே அழித்துக் கொண்ட எம் அன்னையே!
பெற்று பாலூட்டிச் சீராட்டி வளர்த்த எம் தாயே!
உலகில் பெற்றெடுப்பது கல்விச் செல்வம் ஒன்றுதான்
என அன்றும் பகலும் அறிவுறுத்தும் எம் அம்மாவே!
தாயன்பிற்கு இணையாக உலகில் எதனையும் கூற
முடியாது என்ற பொது மொழிக்கு இலக்கணமாக
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எம் நெஞ்சிருக்கும் வரை எம் மாதாவை ஒருநாளும்
மறக்க மாட்டோம்

உங்கள் ஆத்மா சாந்தி அடைந்து ஆடல்
வல்லானின் அடியின் கீழிருக்க இறைவனைப்
பிரார்த்திக்கும்:

அன்புப் பிள்ளைகள்!
கௌரி, சங்கர், சுதர்சன்.

எம் குடும்பத் தலைவியின் இறுதிச் சடங்குகளில் கலந்தும் அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் மொழி கூறியும் உதவி புரிந்தும் ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அனைவர்க்கும் எம் உளம் கனிந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

"கௌரி இல்லம்"
அராலி தெற்கு.
வட்டுக்கோட்டை. (சி-5382)

அறிவித்தல்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த J/49, J/50, J/51, J/52, J/53, J/54, J/55, J/56, J/57, J/58, J/59, J/60 ஆகிய கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு 72-ம், 73-ம் ஆண்டுகளுக்குரிய அடையாள அட்டை புதுப்பித்தலுக்காக புகைப்படங்கள் அடைக்கல மாதா கோவிலில் (யாழ்ப்பாணம்) 23-09-91-ம் திகதி காலை 7-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை புகைப்படங்கள் எடுக்கப்படும்.

உ. அ. அ. பிரிவு
கிராமசேவை உத்தியோகத்தர்கள்.

(சி 5395)

6-ம் மாத நினைவஞ்சலி

க. குமாரச்சந்திரன்
[வள்ளல்]

ஜனனம்: 1968-12-14 — வீர மரணம்: 1991-03-28

உந்தன் கனவுகள் கருவாகிக் கனகாலம்
கலையாதே உன்விருப்புகள் பிறப்பெடுக்கும்
உன்னோடு வாழ்ந்த கணங்கள் ஒவ்வொன்றும்
யுகங்கள் பல வாழும் எம் நெஞ்சத்தில்

நண்பர்கள்.

கிளிநொச்சி. (சி-5331)

31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
Dr. துரையப்பா நவரத்தினம்
R. M. P. (Ceylon)

அன்னை மடியில் 17-12-1941 — ஆண்டவன் அடியில் 23-08-1991

திதி: 22-09-1991

நாட்கள் 31 சென்றாலும் ஆறுமோ எங்கள் மனம்
மன்னவனே என்ன பழைசெய்தாலும் என்னை
அணைத்திருந்தீர்
புன்னகை தவழ்ந்திருக்கும் முகவழகைக்
காணவிருந்தோம்
அன்பைப் பொழிந்தெங்களை ஆசையாய் வளர்த்து
எங்கள் விருப்பம் யாவையும் பூர்த்திசெய்யவே வந்தீரோ
மனைவி மக்கள் பாசத்தை நெஞ்சத்தே சுமந்து வந்தீர்
காலனுமைக் கவர்ந்த செய்தியினால் சிறகொடிந்த
பறவையாய் சிந்தை கலங்கி கண்ணீர் வடிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்,

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (சி-5365)

91-ம் நாள் நினைவஞ்சலி

செல்வி கு. தர்சனா

(கிளி/தர்மக்கேணி அ. த. க. பா. ஆசிரியை)

அன்னை மடியில்: 19.09.1967 — ஆண்டவன் அடியில்: 25-06-1991

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
இம்மூன்றுக்கும் இலக்காம் நீ
இம் மூன்று மில்லாதவர்கள்
எடுத்துவிட்டனர் எம் இதயத்தை
பாடசாலை உன் உடல்,
மாணவர்கள் உன் உயிர்
நீ சென்று விட்டதால்
உயிருமில்லை உடலுமில்லை
ஏங்குகிறோம் ஏதுமின்றி

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

கிளி. தர்மக்கேணி அ. த. க. பாடசாலை. (பி-5393)

"திலீபன் நினைவு நாளில் வீட்டுக்கு ஒரு வீரரை தாயகத்திற்கு தரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"தியாகி திலீபன் 4-வது ஆண்டு ஞாபகார்த்தமாக தேசப்பற்று மிக்கபெற்றோர்கள் வீட்டுக்கு ஒரு வீரரை தாயகத்திற்கு தரவேண்டும்" என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கொள்கை முன்னெடுப்பு பிரிவு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது மக்கள் பல காரியங்களை மறைந்தவர்களின் ஞாபகார்த்தமாக செய்து வருவது வழக்கம். அதைப்போலவே தியாகி திலீபன் நாபத்தை சுமந்து நிற்கும் இந்த நான்காம் ஆண்டு நினைவுகளிலே தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக அவரது நினைவால் தேசப்பற்றுமிக்கப் பெற்றோர்கள், வீட்டுக்கொரு வீரரை இந்தத் தாயகத்திற்குத் தரவேண்டும். இளைஞர்களும், யுவதிகளும் இதை உணர்ந்து போராட்டத்தில் குதிக்க வேண்டும். இதுவரை பல அதிசயங்களைக் கண்ட இந்த மண் எதிர்வரும் 24, 25, 26-ம் திகதிகளில் இன்னொரு அதிசயத்தைச் சந்திக்கட்டும். இன்னொரு புதிய பரணி எழுதப்படட்டும்.

தியாகத் தீ-8

கோட்டையில்
குடிமிருக்கும்
வேட்டை நாய்களை
நாட்டைவிட்டு
வெளியேற்றி
-நம்கொடியை
நாட்டிடும் நாளில்...
புரட்சி வெடிக்குமென
முழங்கியவன்
வதங்குகின்றான்!

- வாஞ்சிநாதன்.

திலீபன் 4-வது நினைவுதினக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் 4-வது ஆண்டு நினைவு தினக்கூட்டங்கள் உடுவில் மருதனுமடம் சந்தை, புங்குடுதீவு மத்தி சனிஸ்டார் விளையாட்டு மைதானம், நாகர் கோயில் முருகன் ஆலயவீதி, அம்பன் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி சிவன்கோயிலடி ஆகிய இடங்களில் இன்று நடைபெறவுள்ளது

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினரால் நடத்தப்படும் இக் கூட்டங்களில் மற்றபடி முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

4-ம் ஆண்டு நினைவஞ்சலி



லெப். கேர்ணல் குமரப்பா

(முன்னாள் யாழ். - மட்டக்களப்புப் பொறுப்பாளர்)

பிறப்பு: 27-05-1957 — வீர மணரம்: 05-10-1987

திதி: 22-09--1991 ஞாயிற்றுக்கிழமை

இப்படிக்கு

'செல்வமாளிகை',
நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

பெற்றோர், சகோதர, சகோதரிகள், மனைவி,
நண்பர்கள், உறவினர்கள்.

(பி-5383)

தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தினரும், கொழும்புத்துறை மகாவித்தியாலய இந்து மாணவ மன்றத்தினரும் இணைந்து இன்று ஞாயிற்றுக் கிழமை ஊதல யாத்திரை ஒன்றை நடத்தவுள்ளனர். இந்த யாத்திரை, காலை 6-30 மணியளவில் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களுக்கு கூட்டு வழிபாட்டுடன் பஜனையாகச் சென்று பின்னர் நல்லூர்க் கந்தன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கு விசேட பூசைகள், பிரார்த்தனைகள் இடம்பெறும்.

செவிப்புலனற்றோர் திலீபன் நூலகம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 4வது ஆண்டு ஞாபகார்த்தமாக இன்று கொட்டடி வெள்ளவாய்க்கால் ஸ்ரார் சனசமூக நிலையத்தில் சிரமதானம் மூலம் புனருத்தாரணம் செய்யப்பட உள்ளதுடன் தியாகி திலீபனின் நூலகத் திறப்புவிழாவும், அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் நடத்தும் கருத்தரங்கும் இடம் பெறும்.

மெய்வல்லுனர் போட்டி

[பண்டகரிப்பு]

தியாகி திலீபனின் 4வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பனிப்புலம் அம்பாள் சனசமூகநிலையமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. நிலையத் தலைவர் அ. முரளிதரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில், பிரதம அதிதியாகப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. மயூரன் கலந்துகொள்வார். (72)

ஈராசி

22-09-1991
ஞாயிற்றுக்கிழமை
தமிழுக்கு புரட்டாதி 6

சதுர்த்தசி பி. இ. 4-11 வரை: சதயம் மு. இ. 9-55 வரை, இராகுகாலம் மாலை 4-32 முதல் 6-02 வரை சுப நேரம் காலை 9-02 முதல் 10-32 வரை சித்தயோகம்.

மேடம்: ராஜகம்பீரம், சுக போகம். பதவிமேன்மை.

இடபம்: முகவ்துதி, தாய் மைப்பாசம், வாக்குசாதுர்யம்

மிதுனம்: விரத்தியுணர்வு, தந்தையின் கண்டிப்பு குடும்ப கவலை.

கடகம்: பிறரிதொல்லை, மனச்சஞ்சலம், மனச்செலவு.

சிங்கம்: கற்பனை வளம், குடும்பமகிழ்ச்சி, உற்சாகம்.

கன்னி: எதிர்வாதம் வசதியான நிலை. குடும்பசுகம்.

துலாம்: குடும்பதுயரம், புத்திரர் செலவு, தடுமாற்றம்

விருச்சிகம்: குழப்பம், குடும்

[4-ம் பக்கம் பார்க்க]

நீர்வை அரசகேசரி தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு அரசகேசரிப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. நாளை தீர்த்த திருவிழா நடைபெறும்.

கலைவாணி விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்படும்

★ உதைபந்தாட்டப் போட்டி ★

1987-ம் ஆண்டு நடந்த அசம்பாவிதங்களால் இறந்த கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த 53 பொதுமக்களின் ஞாபகார்த்தமாக நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி.

★ இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அணிகள் வாவற்றையும் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்வரும் 27-09-1991 4:00 மணிக்கு முன்னர் உங்களின் விண்ணப்பங்களை விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கும் முகவரி:

மதன் கடை (டிப்போக்கு முன்பாக)
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

Jaffna Technical Institute

(றெயில்வே கடவைக்கு அருகாமை)
பிரான்சிஸ் வீதி. யாழ்ப்பாணம். (பி 5398)

★ பிரேமாவுக்கு நெருக்கடி வலுக்கிறது

லலித் - காமினி கோஷ்டிக்கு தெற்கில் பெரும் ஆதரவு

(கண்டி)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட லலித்-காமினி குழுவினருக்கு பலத்த ஆதரவு பெருகிவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

கண்டி மாநகரில் இந்த எதிரணியினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட மற்றுமொரு பேரணியில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாகவும், இதில் நூற்றுக்கணக்கான பிக்குமார்களும் கலந்துகொண்டதாகவும செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் நுகேகொடையில் இவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் 2 லட்சம் மக்கள் கலந்துகொண்டது தெரிந்ததே.

மேலும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக பல கூட்டங்களும் பேரணிகளும் நடத்தப்போவதாக திரு. லலித் அறிவித்துள்ளார்.

இருபாலையில் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

இருபாலை கிழக்கு சனசமூக நிலையத்தின் கண்ணகை அம்பாள் மாதர் அணியினர் நடாத்தும் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற பாலர் கழக விளையாட்டுப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும், சிறுவர்களின் கலை நிகழ்வும், நாடகமும் இடம்பெற இருக்கின்றது இவ்விழாவிற் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

[வி]

இன்று

[யாழ்ப்பாணம்]

ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று ஞாயிறு நடைபெறவுள்ளது நாளை தீர்த்தோற்சவமும், செவ்வாய்க்கிழமை பூங்காவனத்திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறும்.

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு கண்டுப்புளியடி வீரபத்திர ஆலய வருடாந்த சங்காபிஷேகமும் சப்பரத்திருவிழாவும் இன்று விசேட மேளகச்சேரிகளுடன் நடைபெறுகிறது.

கண்டெடுக்கப்பட்டது

கொக்காவில் பழைய இராணுவ முகாம் அருகே யாழ்வவுனியா வீதியில் தவறவிடப்பட்ட ஒரு சிறுபண 'சூட்' எஸ் எம் ஆர் ஜொறி நிறவனத்தினரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

இராசிபலன்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பயிரிவு, வைத்தியசெலவு.

தனுசு: தியாக உணர்வு, பேசிமகிழ்தல், தொழில் சிறப்பு.

மகரம்; அவசரமுடிவு, தொழில் நஷ்டம், வெறுப்பு.

கும்பம்: நிர்வாகதிறமை, அதிர்ஷ்டம், பணவரவு.

மீனம்; பொறுமைக்குணம், மனக்குழறல், காரியத்தடை.

ஜோஸ்யர்

போட்டியின்றி

'ராவை' லோக சபைக்கு தெரிவுசெய்ய முயற்சி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவைப் போட்டியின்றி லோக சபைக்குத் தெரிவு செய்வதற்குத் தீவிர முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

இவரது சொந்த மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தின் நந்தியால் லோகசபைத்தொகுதியில் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாகவும் போட்டியின்றி அவர் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட்:

சென்றலைட்ஸ் அணி சாம்பியனாகியது

(யாழ்ப்பாணம்)

சொக்குவல் சி.சி.சி.யினர் நடாத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டு கழகம் சாம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் 'ஷப்ரு' அணி முதலில் துடுப்பெடுத்தாடி 40ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆடிய சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி 38.2 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்களை பெற்று சாம்பியனாகியது. போட்டியின் நாயகனாக சென்றலைட்ஸ் அணி வீரர் கி. என். மதிவதனன் தெரிவுசெய்யப்பட்டார்.

[சி]

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் அனைவரும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்திற்குத் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இக்கூட்டத்தில் கூட்டுத்தாபனம் சம்பந்தமான பல்வேறு விடயங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மகா சண்டீஹோமம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி துர்காதேவி தேவஸ்தானத்தில் மகா சண்டீஹோம வேள்வி விழா இம்மாதம் 30ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 2ம் திகதி புதன்கிழமை வரை 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தெற்கு அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரகாரம் தற்போது எதிரும் புதிருமாக இருக்கும் ஜனாதிபதி பிரேமா தரப்பினரும், லலித் குழுவினரும் விரைவில் சந்தித்துப் பேசிக் கொள்ளலாம் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

வீடு பார்க்கச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொலையுண்டவரின் மூளை துப்பாக்கிச் சூட்டினால் சிதறியும், வயிறு, கை, முகம் ஆகியவற்றில்வெட்டுக்காயங்களும் காணப்பட்டன. [122]

டிசம்பரில் க.பொ.த. பரீட்சை

[கொழும்பு]

க. பொ. த. [சாதாரண] தர பரீட்சை டிசம்பர் 9-ம் திகதி தொடக்கம் 18-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு. ஆர் தர் வெதமுல்ல தெரிவித்தார்.

மாஜி அமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

மீண்டும் ஜனாதிபதிக்கு ஆதரவாக செயற்படுமாறு கோரியே திரு. மல்லிமரராய்ச்சி இவர்களை சந்தித்துள்ளார்.

க. பொ. த. முடிவுகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து அறியப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து நேற்றிரவு செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெறுபேறுகளுடன் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்ததாகவும் பெரும்பாலும் நேற்றிரவே ஈழவித்திணைக்களத்துக்குபெறுபேறுகள் வருமென எதிர்பார்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. [152]

மனச்சாட்சியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்லாபங்களே மேலோங்குமென பி. பி. ஸி. தெரிவித்தது.

தென்பகுதியில் மக்களுக்கு பல நல்ல திட்டங்களை திரு. பிரேமதாஸா வழங்கியுள்ளதால் மக்களிடையே அவருக்கு நல்ல செல்வாக்கு இருப்பதையும் ஐ. தே. க.வினர் உணர்வார்கள் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதேவேளை தெற்கில் ஜனாதிபதிக்கெதிரான குற்றச்சாட்டுகளில் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதான குற்றச்சாட்டையே லலித் கோஷ்டியினர் பிரசார ஆயுதமாக பயன்படுத்திவருகின்றார்களாம். ஏனைய குற்றச்சாட்டுக்கள் அவ்வளவு தூரம் எடுபடவில்லையென்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

[சி]

லலித் பாதுகாப்பிற்கு

புதிய படையணி

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக தீவிரமாக செயற்பட்டுவரும் திரு லலித் அத்துலத் முதலியின் பாதுகாப்பிற்கு அவரது ஆதரவாளர்கள் புதிய படையணி ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

நிராயுத பாணிகளாக திரு லலித்துடன் செல்லும் இப்படையணியில் சுமார் 30 பேர் அடங்கியிருப்பதாகவும் இவர்களுக்கென விசேட வாகனம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவருக்கு வழங்கிய இரு ஆயுதபாணிகளான பாது காவலருடன் இவர்கள் தகுந்த பாதுகாப்பை லலித்துக்கு வழங்குகிறார்களாம்.

அமெரிக்கா - இலங்கை

புதிய ஒப்பந்தம்

(கொழும்பு)

மூலதன ஊக்குவிப்பு பாதுகாப்பு சம்பந்தமான புதிய ஒப்பந்தமொன்றில் இலங்கையும் அமெரிக்காவும் நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திட்டுள்ளன.

1985ம் ஆண்டு கொழும்பிலும், வாஷிங்டனிலும் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கென மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் அதிகரித்த அளவில் பெற்றுக்கொள்வதுடன் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும்.

8 மணி நேரம் தீப்பற்றி எரிந்த காடு

(கொழும்பு)

மணலாறு பகுதியில் நேற்று முன்தினம் விமானப்படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் காடுகள் எட்டு மணித்தியாலம் தீப்பற்றி எரிந்ததாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இப்பகுதியில் வழமைபோல் குண்டுவீச்சு நடவடிக்கையில் விமானங்கள் ஈடுபட்டிருந்தன வென்றும் அவ்வேளையில் மேலிருந்து குண்டுகள்போடப்பட்ட சில நிமிடங்களில் இக்காடுகளின் ஒருபகுதியிலிருந்து பெரும் தீச்சுவாலையுடன் காடுகள் தீப்பற்றி எரிந்தனவாம்.

மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தநிலைமை பற்றி இவர் டென்ஸில் கொப்பேகடுவ, மற்றும் யாழ் மாவட்ட இராணுவத் தளபதி விஜய விமலரட்ணவுடன் ஆராய்ந்துள்ளார்.

தொடர்ந்தும் இப்பகுதியில் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

5000 ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆசிரிய நியமனங்களுக்கான அனுமதியை திட்டமிடல் அமைச்சு கல்வி ஆணைக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

போட்டிப் பரீட்சைமூலம் இந்த ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேமாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து சுமார் 50 பிக்குமார் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச்செய்ததனர்.

தற்போது திரு. பிரேமதாசாவின் எதிரணிக் குழுக்களுக்கும் ஆதரவு தெரிவித்து பல பிரபல பிக்குமார் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

முத்துபண்டாவும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற பொழுது எச். எம். முத்துபண்டா எம். பி இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இவருடன்சேர்ந்து லலித்குழுவில் உறுப்பினர் தொகை பதினொன்றாக அதிகரித்துள்ளது.

ஐ. தே. கட்சியைச்சேர்ந்த மேலும் பல எம். பிக்கள் லலித் குழுவில் சேரவிருக்கிறார்கள் என்றும் இவர் தெரிவித்தார். [153]

8 மணி நேரம் தீப்பற்றி எரிந்த காடு

(கொழும்பு)

மணலாறு பகுதியில் நேற்று முன்தினம் விமானப்படையினர் நடாத்திய குண்டுத் தாக்குதலில் காடுகள் எட்டு மணித்தியாலம் தீப்பற்றி எரிந்ததாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இப்பகுதியில் வழமைபோல் குண்டுவீச்சு நடவடிக்கையில் விமானங்கள் ஈடுபட்டிருந்தன வென்றும் அவ்வேளையில் மேலிருந்து குண்டுகள்போடப்பட்ட சில நிமிடங்களில் இக்காடுகளின் ஒருபகுதியிலிருந்து பெரும் தீச்சுவாலையுடன் காடுகள் தீப்பற்றி எரிந்தனவாம்.

திருச்சொரூப பவனி

(வேலணை)

வட இலங்கையில் உள்ள கிறீஸ்தவ சமயத்தவர்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி கிந்தாத்திரை மாதா ஆலயத்தின் வருடாந்த நோவினையும் திருச்சொரூப பவனி விழாவும் எதிர்வரும் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெறவிருக்கின்றது.

சென். நீக்கிலஸ் வெற்றி

[யாழ்ப்பாணம்]

வீரர் நினைவாக புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் நேற்று நாவற்துறை சென். மேரிஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை, சென் நீக்கிலஸ் 'ஏ' பிரிவுக்கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவானது. (வி)

அலங்கார ஊர்தி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய தொழிற்சங்கங்களின் சம்மேளனம் இம்மாதம் 25ம்திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தியாகி திலீபனின் நினைவு தினத்தையொட்டி அலங்கார ஊர்தி ஊர்வலம் ஒன்றை நடாத்தவிருக்கிறது. (153)

சுதந்திரகட்சியின் புதிய செயலர்

[கொழும்பு]

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தான் தொடர்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியாகவும், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் இருப்பாரென்று மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

கட்சி பொதுசெயலர் பதவியில் வெகுவிரைவில் மாற்றம் வரவிருப்பதாகவும் கூறப்படுகிறது. சோணல் அனுருத்திரரத்னவத்த கட்சி செயலராக நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (153)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விநாயகத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.